27.11.2024

அ.வ.எண். 529-2017

வாசா.3 - ஜனார்த்தனன்

<u>16 மற்றும் 17ம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

எனக்கு 1ம் வாதி பழனிச்சாமி பக்கத்து வீட்டுக்காரர், அவர் 20 ஆண்டுகளாக பழக்கம். நான் சாட்சி கையொப்பம் செய்துள்ளதாக சொல்லும் பத்திரத்தின் அசலை பார்த்துள்ளேனா என்றால் இல்லை. பத்திரத்தை எழுதுவதற்கு என்னென்ன ஆவணங்கள் கொண்டு வந்தார்கள் என்றால் வாக்களார் அட்டை கொண்டு வந்தார்கள், வேறு என்ன ஆவணங்கள் கொண்டு வந்தார்கள் என்று நினைவில்லை. என்னுடன் சேர்ந்து சாட்சி கையெப்பம் இட்ட நபர் பழனிச்சாமியின் மைத்துனர். பத்திரம் தயார் செய்தது தேவராஜ். எவ்வளவு ரூபாய்க்கு ஸ்டாம்ப் வாங்கப்பட்டது, எவ்வளவு பதிவு கட்டணம் செலுத்தப்பட்டது என்று எனக்கு தெரியாது. நான் கையொப்பம் செய்த அசல் ஆவணம் பழனிச்சாமி வசம் தான் உள்ளது. பழனிச்சாமி அவரது மைத்துனர் மற்றும் என்னை வைத்து போலியாக பத்திரம் தயார் செய்ததால் தான் அவர் அசல் ஆவணத்தை இந்நீதிமன்றத்தில் ஒப்படைக்கவில்லை என்றால் சரியல்ல. அசல் ஆவணத்தை நான் பார்க்காமல் சாட்சி சொல்வதற்கே அறுகதை அற்றவர் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

Sd/ஜனார்த்தனன்

Taken down by me to open court read over to the witness and acknowledged by her to be corrected.

Sd/Renuga
District Munsif,
Sulur